Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுகவருஷ தை மீ உசு உ (8—2—34) } No. 11

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

திருவாய்மொழி

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுள்நேர்மையதுவிதுவென்று
என்றுமொருவர்க்குணரலாகா துணர்ந்துமேலும்காண்பரிது
சென்றுசென்றுபரம்பரமாய் யாதுமின்றித்தேய்ந்தற்று
நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானம்கடந்ததே.

நன்றாய்ஞானம்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்து
ஒன்றாய்க்கிடந்தவரும்பெரும்பா ழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத்துன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீ டதுவேவீடுவீடாமே.

அதுவேவீடுவீடுபேற் றின்பந்தானுமதுதேறி
எதுவேதானும்பற்றின்றி யாதுமிலிகளாகிற்கில்
அதுவேவீடுவீடுபேற் றின்பந்தானுமதுதேறாது
எதுவேவீடேதின்பமென் றெய்த்தாரெய்த்தாரெய்த்தாரே.

உ
திருவருள் துணை.

ம
நந்தி பதி
கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை.
ஸ்ரீமுக தைமீ 26உ

அமல ஐகாரம்

பூ, நீர் (கார்), எரி, கால், விசும்பு என்பன ஐம்பூதம் — ஐந்து காரம். காரம் என்பது உஷ்ணம்— தேயு. தேயுவே அக்கினி. அக்கினியே மூலம் — கடு அரசு. ஐந்து காரம் என்பது ஐகாரம்.

இந்த ஐகாரம் அமலமானது. எக்காலத்தும் இயக்கம் என்னும் அசைவுடையது. அவ் அசைவினால் ஓவாது ஒலித்துக்கொண்டிருக்கும் தன்மையுடையது. இதனால் ஐகாரமே வேதம் எனப்படும். எம்பெருமான் வடிவமாகிய நித்திய வேதம் இதுவே. இது ஆதி எனவும் பெயர் பெறும். எம்பெருமான் திருவடிக்கு ஆதி.

இந்த ஐகாரமே ஞானசத்தி வடிவமாக விளங்கும் நந்தியாகிய குருநாதன் திருவடி; என்றும் குறைவு படாமல் எவற்றை விளக்க வேண்டினும் விளக்கவும் விளத்தவற்றைத் தனக்குள்ளே மீட்டுக் கொள்ளவும் ஆற்றல் அமைந்துள்ளது; எல்லா வல்லபமும் உடையது. பிரிபடாத இந்த ஆதி அமல ஐகாரமாகிய பஞ்சகாரம்—பஞ்சக்கரம்-பஞ்சாக்கரம்—பஞ்சாட்சரம் வியாபக நிறைகளையுடையது. இதுவே வியாப்பியம்; யாவற்றுக்கும் மூல காரணம்; பதி.

ஐகாரத்தில் ஒவ்வொரு காரம் இன்ன இன்ன நிறை எனப் பிரிந்து பஞ்சிகரணித்து வியாபகம் பெற்றது ஆன்மா—வியாபகம்—மித்தை. இதுவே பசு. வியாபகமே காரியம். வியாபகத்தில் வியாபகமாய் விளங்குவது அஃதாவது காரியத்தில் காரியமாய் விளங்குவது தூலமாகிய சிவை— திரோதானம். இதுவே பாசம். பதி பசு பாசம் என்பன என்றும் உள்ளனவே. இவை அநாதியே.

திருமந்திரம்

அறிவறி வென்ற வறிவு மனாதி
யறிவுக் கறிவாம் பதியு மனாதி
யறிவினைக் கட்டிய பாச மனாதி
யறிவு பதியிற் பிறப்பறுந் தானே.

(செ. 8–ம் தந். 6–வது பதிபசுபாச வேறின்
[மை. 1.)

இந்த அமல ஐகாரமாகிய வியாப்பியத்தினின்று நிறை பிரிந்து பஞ்சிகரணித்து வியாபகம் பெற்ற அசுத்த நிறைக்கு — ஆன்மா என்னும் மித்தைக்கு பிரிபடாத மேற்படி அமல ஐகாரத்தோடு திரும்பக் கூடுதற்கு அறியுந்தன்மை இல்லை. ஆதலால், வேதம் என்னும் ஒலிவடிவாய் விளங்கும் ஆதி அமல ஐகாரமானது, நிறை பிரிந்து பஞ்சிகரணித்து வியாபகம் பெற்ற ஆன்ம நிறையில்—அசுத்த நிறையில், அவ் ஆன்மா தன்னிடம் திரும்புதற்குரிய நிறையாகிய வேதம் என்னும் ஒலி வடிவாய்த் தானும் வியாபித்து, "நீங்கள் என்னிடமிருந்து சென்றவர்கள்! நீளச் சென்றிடாதீர்கள்! சென்று திகைத்திடாதீர்கள்! சென்ற தடம் உங்களுக்குத் தெரியாது! ஆதலால் இன்ன இன்ன தடம் சென்றீர்கள்! வேறு தடம் புகாதீர்கள்! புகாதீர்கள்! திரும்பி இத் தடத்தால் வாருங்கள்! வாருங்கள்!! எம்மிடம் குவியுங்கள்!!!" என்று ஒலி வடிவமாய் ஒலியாகிய சப்தமிட்டு அநவரதம் கூப்பிடுகின்றது — ஓயாமல் ஒலிக்கின்றது— அநவரத தாண்டவம் புரிகின்றது.

மேலே கூறிய ஆதி அமல ஐகாரமாகிய ஐந்துகாரம் என்பது தான் ஐந்து அக்கரம்—பஞ்ச அக்கரம்— பஞ்சாட்சரம் — எம்பெருமான் திருவடி. இஃது ஆரூர் கமல மத்தியில் ஓவாது அசைந்து கொண்டு — நடனஞ் செய்து கொண்டு — ஒலித்துக் கொண்டு இருக்கும். நமது அப்பன் நாவுக்கரையன், ஞானசம்பந்தன், மாணிக்கமணியாகிய நம் கண்மணி முதலிய தத்துவப் பெரியார் "நமச்சிவாய" "சிவாய நம" என்று இந்த ஆதி அமல ஐகாரத்தையே காட்டாமல் காட்டி கௌனமாக தேவ ஆரம் திருவாசகம் முதலிய வற்றில் திருவாய் மலர்ந்தருளினர். இவ் அரிய பெரிய வேத உண்மைகளை அன்னவரே சொல்லாமல் சொல்லியருளினர் என்றால், சிற்றறிவினனாகிய தமியேன் மேலும் விரித்துரைக்கத் தகுமோ!

வியாப்பியம் வியாபகம் என்பன என்றும் உள்ளனவே. இவை இரண்டனுள் ஒன்றுக்கு ஒன்று முற்பிற்பாடு இப்ப ஒண்ணாது. வியாப்பியம் அசைவற்ற இடம் என்பர். அஃதாவது அசையாமல் அசைந்து நிற்கும் இடம் என்பது. வியாப்பியத்தின் அந்தமும் வியாபகத்தின் ஆதியும் சேர்ந்த இடமே — காணப்பட்ட இடமே இருவினை என்னும் உடலு

யிர் அற்று அஃதாவது அவை சமம் பெற்று நின்ற இடமாகும். நிறைகோலாகிய மையமுள் எப்பக்கமும் சாயாது புற இயக்கம் என்னும் வெளிப்படையான இயக்கம் இன்றி, உள் இயக்கம் என்னும் நிறைகொண்டு அசையாமல் அசைந்து நிற்கும் இடமும் இதுவே. அம் மையமுள் நிறை காட்டும். நிறையைக் காட்டுவதும் நிறையும் அதுவே. நிறையே சிவம். நிறையே அமல ஐகாரம். இந்த அமல ஐகாரத்து நின்றும் நிறை பிரிந்து பஞ்சிகரணித்து வியாபகம் பெற்றது அகிலம். வியாபகம் குற்றமுடையது-பங்கமுடையது. குற்றம் எதனாலாயது? நிறை பேதத்தாலாயது. நிறை பிரிந்து வியாபகம் பெறுமுன் வியாப்பியமாகிய "ம்" என்றே இருந்தது. இதுவே ஆதியும் அந்தமும். எதற்கு ஆதி? வியாபகத்துக்கு ஆதி. எதற்கு அந்தம்? வியாப்பியத்துக்கு அந்தம். மகரம் உள் இயக்க முடையது—கௌண இயக்கமுடையது. இதிலிருந்து நிறை பிரிந்து பஞ்சிகரணித்து வியாபகம் பெற்றபோது—வியாபகம் என்னும் அசைவு பெற்றபோது, அவ்வசைவென்னும் இயக்கத்தாலாய பலவித நாதங்களாயும் ஒலிகளாயும் விரிந்தது. வியாப்பியம் ஆரியம் எனவும் வியாபகம் தமிழ் எனவும் கூறப்படும். ஆரியம் தமிழ் என்பனவற்றின் இயல்கள் வேறோர் அத்தியாயமாக விரித்துக் கூறப்படும்.

பதி பசு பாசம் என்பன வியாப்பிய வியாபகங்களுள் அடங்கும். அவை மூன்றாகக் கூறப்படுகின்றனவே யெனின், வியாப்பியம் பதியாக, வியாபகமே பசு பாசம் இரண்டையும் உடையது என்க. எவ்விடத்திலிருந்து நிறை பிரிந்து வியாபகம் பெற்றதோ அவ்விடத்தை மீண்டும் அடைவது தான் முத்தி என்பது. வியாபகத்தால் நிறை பேதம். பேதம் என்பது குற்றம்—அழுக்கு—அசுத்தம்—பங்கம். இதுவே பாசம்.

நிறை பிரிந்ததனால் பங்கமடைந்து வியாபகம் பெற்ற அசுத்த நிறையாகிய ஆன்ம நிறையானது — ஆன்மாவானது அமலமடைந்து மீண்டும் நிறை பிரிந்து வியாபகம் பெற்ற இடத்தை அடைவது எவ்வாறு? அது தன்னை மீட்குமாறு—பூரணப்படுத்துமாறு தன் சரீரத்தில் வேத வடிவாய் — அணு ரூபமாய் — வித்தாய் விளங்கும் பதியை — அப்பன் திருவடித் தாமரையைக் காணுதல் வேண்டும் — பற்றுதல் வேண்டும்—பற்றிப் படியேற்றம் பெறவேண்டும் என்க. ஆரூர்ப் பங்கசதள மத்தியில் நடனமிடும் அப்பன் திருவடித் தாமரையைக் காண்பது—பற்றுவது எவ்வாறு? ஆரூர் எங்குள்ளது? எனின், அது நமது சரீரத்திற்றான் காணப்படவேண்டும் அஃது எவ்வாறு எனின், சிறிது கூறப்படும்.

பங்கம் என்பது குற்றம். அசம் என்பது சேறு. அழுக்கு மலிந்த சேற்றினிடத்தில் பங்கஜ தளம் என்னும் தாமரையின் வித்து ஊன்றப்பட்டுழி, அவ்வித்து குற்றம் பொருந்திய சேற்றினுள் இருந்தும், பங்கமாகிய சேறு தன்னைப் பற்றித் தன்னிற் கலக்காது அச்சேற்றினுள் விளங்கும் அமல உஷ்ணம் — சுத்த அக்கினியில் பஞ்சிகரணிக்கப்பட்டு, அங்குரம் பெற்றுப் பின் முளைகண்டு விளைவேறி அவ் அசுத்தத்தினின்றும் மலர்ந்து தோன்றிக் குற்றமற்றதாகக் காணப்பட்டது எவ்வாறோ, அவ்வாறு பங்க அசமான — அழுக்குச் சேறான பிண்டமாகிய தேகத்துள்ளும் மறைந்து வித்தாக விளங்கும் ஆசான் — குரு — சிவம் — மறைந்திருந்த மறையாயிருந்த மறை என்னும் ஆசான், அப்பிண்டம் சாதக யோகங்களால் நிறை கண்டு பஞ்சிகரணிக்கப்படின் உற்பனஞ் செய்யப்படுவன்.

அளப்பலாகாப் பெரும் பெட்பு வாய்ந்த குக்கும நிறையுடைய பயில்வுகளால் இம்மகத்தான விளைவு செய்ய அறியாதார் —முயலாதார்—முயன்று சித்தி பெறாதார் பிறவித்துன்பம் நீங்கி முத்தி வாயிலிற் சேரார் என்பது கரந்தூக்கி மொழியப்படும். பின் வரும் பிரமாணம் இவ்வுண்மையை நன்கு விளக்கிக்காட்டும்.

அப்பர்

குறைந்த—திருநேரிசை.

விளைவறிவிலாமையாலே வேதனைக் குழியி [லாழ்ந்து
களைகணுமில்லேனெந்தாய் காமரங்கற்று [மில்லேன்
தளையவிழ் கோதை நல்லார் தங்களோ [டின்ப மெய்த
இளையனுமல்லேனெந்தாயென் செய்வான் [றோன்றினேனே செ. (9).

வித்தாகிய ஆசான் விளைவேற்றப் பட்டு எந்த நிறையைப் பெறவேண்டுமோ அந்த நிறையைப் பெற்றால் முன்னிலைப்படுவன். இவ்வாறு முன்னிலைப் போந்த காலத்து "பெருந்துறைக் கோன் முன்பால் முழங்கு முரசு" எனப்படும் சாமவேதம் நிறைகொண்டு கானஞ் செய்யப்படும். ஆசான் என்னும் மறைந்திருந்த வித்து உற்பனமாதற்குரிய தன்மை பெற்ற இடம் இதுவே. வித்தானது கெடாமல் விளையுந்தன்மை அடைந்து விட்டது—பக்குவம் பெற்றுவிட்டது என்பது. மாணவர் எப்பக்குவம் பெற்றனரோ அப்பக்குவமே ஆசானும் பெற்றனன். உருவுக்கு ஏற்பச் சிடன் சிடனுக்கு ஏற்பக்குரு என்பதும் இதுவே. சிடன் பக்குவத்துக்கு ஏற்பவே அவன் அகத்துத் திவலையாயிருந்த அகண்டாகார அமல சொரூபம் முன்னிலையிற் போந்து உய்யும் நெறியைக் காட்டும். அப் பக்குவ சிவன் குரு நெறி கடைப்பிடித்து ஒழுகிப் படியேற்றம் பெற்றால் அமல நிறையைப் பெறும். நிறை பெறின் தளம்—தளமாகிய மலர்—முன் தாம் மறைந்திருந்த மலர்—தாமறை மலர்--தாமரை மலர்—பங்கசதளம் மலரும். பங்கச மலர்ப்பாதம் இதுவே. திருவடி என்பதும் இதுவே. தாமரைத் திருவடி—தாம் மறைந்திருந்த திருவடி—வேதம் மறை வேதம். இதனால் பெறப்படு

வது யாது? சேறு=பிருதிவி; அன்பு=அப்பு; சூரியன்=உஷ்ணம்-அப்பின் மேல் அக்கினி. அக்கினியோ வாயுவின்றி ரூபம் பெறாது. வாயுவும் ஆகாயத்தில் தோன்றியது. ஆதலால் ஐகாரம் என்னும் பஞ்சபூதம்—அசுத்த பௌதிக தநு நிறையோடு பஞ்சீகரணிக்கப்பட்டால் ஆரூர்ப்பங்கசதள மத்தியில் நடனமிடும் அப்பன் திருவடித் தாமரை காணப்படும் என்பது நன்கு பெறப்படுகின்றது.

[மறை மரை என வழங்குதல் இலக்கண முறையா என ஐயுறுவார் உளர்போலும். றகர ரகரங்கள் வன்மை மென்மைகளாய் மயங்குதல் இயற்கை என்றே கொள்ளற்பாற்று. தற்கால இலக்கண நூல்கள் எழுத்துக்களின் இலக்கணங்களைப் பூரணமாகக் கூறவில்லை என்பது மறுக்க முடியாதது. இதன் திறமெல்லாம் ஈண்டு விரித்தல் மிகை.]

இப் பங்கச தள மத்தியில் வீற்று ஆடரவை—சிறக் கொத்தும் காகத்தை—வாசுகியாகிய வாசியை—வாசியாகிய மனதை—மனமாகிய மதியை அடக்கி ஆடுவன் பெருந்துறையான். கோகழியாகிய கடலை—சரீரத்தை—முன்னிலையை—உப்பை—உப்பில் இருக்கும் துப்பை நீக்கி—கடந்து அதன் மத்தியில் இருக்கும் குருவிடம் (குருந்தம்) அடைந்து அப்பு உப்புச் சமம் பெற முப்பு முடித்தல்—முப்பு என்னும் குரு முடித்தல் எளிதன்று.

குருநாதன் சரீர நிறை பறித்து அதன் அசைவுகளின் இயல்பறிந்து—வினையறிந்து எற்றவாறு விதிக்கும் விதிகளை வழுவற அநுட்டித்து—முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து அநுபவித்தலால்—அருந்துதலால் மேலே கூறிய அமல ஐகார ஒலியை—வேதத்தை அடையப் பெற்ற சகச நிட்டையாளர் சரீரம் அணு அணுவாக துப்பு நீங்கி—பாசம் நீங்கி—பங்கம் நீங்கி—அசுத்த நிறை நீங்கி அமலமடையும்—சுத்த நிறை பெறும். இது பற்றியே,

திருமந்திரம்

எளிய வாதுசெய் வாரெங்க ளீசனை
யொளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவெனுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்
[டையே.

(ஷ 9-ம் தந். சூக்குமபஞ்சாக்கரம் செ. 1)

என்று அருளிச் செய்தார் எம் அண்ணலாகிய திருமூலர். சிவாயநம எனும் குளிகை=அமல ஐகார ஒலி. அசுத்த பௌதிகங்கள் கெட்டுச் சுத்த பௌதிகமாக மாறுதலே பொன்னாக மாறுதலாம். சிவாய நம எனும் குளிகையே—அமல ஐகார ஒலியே—அமல நிறையே நமது அசுத்த பௌதிக தநுவைச் செம்பொற் றநுவாக மாற்றுவது; புலால் துருத்தியைப் பூந்துருத்தி யாக்குவது. அசுத்த நிறையாகிய கூற்றனை உதைத்து மீண்டு வாரா நெறியின்கண் உய்ப்பது என்க. இவற்றைப் பின்வரும் பிரமாணங்களால் கண்டு தெளிக.

கந்தரலங்காரம்

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்
[தவைவேன்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ
[னத்தையுற்று
நின்னை யுணர்ந் துணர்ந் தெல்லா மொருங்
[கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட
திவ்வுடம்பே (19.)

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழி
[றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மன
[மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும்
[வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன்
[கையெழுத்தே (40).

கந்தரந்தாதி

திகைப்படல் கப்புயர் தர்தரு வானென்
[படிக்கனிய
திகைப்படக்கத்தமையார்செந்திலாரென்ப
[டென்னுய
திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னி
[கண் ணீர்தாவி
திகைப்படங் கத்தமை யாதெமை யாட்
கொளுஞ் சீரமே. (65).

[விதி–கைப்படு–அங்கத்து–அமையாது—யெமையாட்கொள்].

சுத்த நந்தி நாதமாகிய அமல ஐகார ஒலியை—எம்பெருமான் முன்பால் முழங்கு முரசைக்கேட்டு, அவ் ஆசானை — எம்பெருமானை — மதியாகிய பதியை — பதியாகிய பெருந்துறையானை எவ்விதத்தும் அடைய வேண்டும் என்கின்ற இலட்சியம் வாய்மையாகப் பூண்டு தன் அகத்துள் தேட வேண்டும். மேகம் ரவி மதியை மறைத்திருப்பது போல அஞ்ஞானமாகிய இருள் சுத்தாகிய சரீரத்துள் விளங்கிருக்கும் ஆசானை மறைத்திருக்கும். இவ் அழுக்கைத்தான் அசுத்த நிறை—பங்கம்—பாசம்—மலம் என்பது. இது சுத்த நிறையில் கலந்து பிரிபடாது இருக்கும். இலட்சியமாகிய ஆராமை என்னும் தேயுவை (சுத்த அக்கினி) ஊட்ட ஊட்ட அவ் அசுத்த அழுக்கு சுத்தத்தில் நின்று விலகி ஒருபால் ஒதுங்கல் பெறும். இலட்சியமே ஞானக்கினியாக இருந்து அவ் அழுக்கை—இருட்டை—அஞ்ஞானத்தை விலகச் செய்யும். விலகச் செய்த போது அங்கு ஆசான் தெரிசனை ஆகும். ஆரூரும் இதுவே என அறிக. இவ் ஆரூர்ப் பேறு எம்பெருமான் அருளாலன்றி—அவன் அருளுபதேசத்தின்படி ஒழுகுதலாலன்றி மனோதர்மத்தால் ஆகும் எனக் கருதுவது அறியாமையே. "அவனன்றி யூர்புகுமாறறியேனே" என்று அருளினர் எம் அண்ணலாகிய திருமூலர். இத்தன்மை வாய்ந்த வித்தகர்க்கே தாம் அடியவர் என்பாராய் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று அருளிச் செய்தார் எமது குருநாதராகிய தம்பிரான்றோழர்.

இவ் அசுத்த நிறை நீக்கப் பெறுதலையே "நந்தி விலகுதல்" "மாடு விலகுதல்" என்பர் வித்தகர் என்னும்

சித்தர். இது பரிபாஷை. நந்தனுருக்கு நந்தி விலகிச் சிவ தரிசனம் கொடுத்தது என்பதன் உண்மையையும் நோக்குக. இம்மாடு தான்—அசுத்த பௌதிக உடம்புதான், எம்பெருமான் சந்நிதானத்தை—சுத்த நந்தி ஒளியால் காணப்படும் பெருந்துறையை மறைத்திருப்பது. சிவசுபாவம்—சிவ இயற்கை—அபிமானம் என்பனவற்றால் அகப்பற்றும் புறப்பற்றும் உளவாகின்றன. இவைகள் மேலோர் பேசும் பாஷை. சுருங்கச் சொல்லுமிடத்து இவற்றைச் சரீர பாவனை என்று சொல்லலாம். சரீர பாவனை அல்லது சரீர ஞாபகம் என்பதே "நான்" என்பதற்கு வித்து. இதிலிருந்துதான் பல அநர்த்தங்களும் விளைகின்றன. சரீரமே நந்தி. இதுவே ஈசுவரனை நமக்கு மறைத்துக் கொண்டிருப்பது. இந்தச் சரீரம் ஒழிந்தால்—இதன் ஞாபகம் அகன்றால்—இது மாறினால்—நந்தியெம்பெருமான் திருவருள் பெற்றால்—நந்தி ஒளி கண்டால் பெருந்துறைத் தரிசனம்—ஆரூர்த் தரிசனம் உண்டு என்று வேதம் முறையிடுகின்றது. இந்நிலை பதிதற்குத் திருவருட் சகாயம் இன்றியமையாதது. இதற்குக் குருநாதன் விதிப்படி வழுவின்றி ஒழுகவேண்டும். ஒழுகுங்கால் கர்மங்களெல்லாம் சாங்கோபாங்கமாய் சரீரத்தைவிட்டு அகலுகின்றன. எத்தனையோ சென்மங்களுக்கு வித்தாயிருந்த வினைகளெல்லாம் அம்மையப்பர் அருளால் லேசமான அநுபவமாய் வந்து சரீரத்தை விட்டகலவே சரீர பாவனை நீங்கும். குருநாதன் விதிப்படி முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து அமல ஐகார ஒளியை அடைந்து அசுத்த நிறை யெனும் களிம்பு சுண்ணமாக மாறப்பெறுதார்—அசுத்த பௌதிக நிறை செம்பொன் செய் சுண்ணமாகப் பெறும் நெறியறியாத உலகமாக்கள் "கடவுளைக் கண்டோம்" "கூற்றனை வென்றோம்" "முத்தி வாயிலில் இருக்கின்றோம்" என்று கூறுவது வெற்றுரையே என்பது சொல்லாமலே அமையும். அமல ஐகார ஒளியை அடையப்பெற்ற சகச நிட்டையாளர் தமது தூலம் அமல ஒளிமயமாகப் பெற்று அதனோடு உலகு கண்டு போற்ற மறைந்து உண்மைச் சைவ முத்தியடைவர். திருவாசகம் முதலிய தத்துவப் பெரியார் பாடல்களெல்லாம் உண்மை முத்தி நிலையை நன்கு புலப்படுத்தும்.

இதுகாறும் கூறியவைகளால் அமல ஐகாரமே பஞ்சாக்கரம் என்பதும், வியாப்பிய வியாபகங்களாகிய பதி பசு பாச உண்மைகளும், பௌதிக தநு நிறையோடு பஞ்சீகரணிக்கப்பட்டால் அப்பன் திருவடித்தாமரை காணப்படும் என்பதும், அமல ஐகார ஒளியை அடையப்பெற்ற சகச நிட்டையாளர் தூலம் பிணமாக விழாது சூக்குமமாய் ஞான சத்தி வடிவமாக மறைய அவர் உண்மைச் சைவ முத்தியடைவார் என்பதும் பிறவும் ஒருவாறு உணரப்படும்.

சுபம்.

உடம்பின் அருமை பெருமை

[10-வது வாரத்தொடர்ச்சி]

செம்பு களிம்பு நீங்கிப் பொன்னாயவாறு போல, சரீரம் பொன்மயமாய்—பொன் குரம்பையாய்—பூங்குடம்பையாய்க் கண்ணாடிபோல் நிழற்சாயையின்றி விளங்குவதே, குற்றங்களுக்குக் காரணமாய்ச் சாதலைத்தரும் அசுத்த நிறை நீங்கியதற்கு—மலம் விமலமானதற்குச் சான்றாகும். இத்தன்மை வாய்ந்தவரே முன்னிலைகளைத் தந்நிலைப் படுத்தியவர்—முன்னிலை தன்னிலைகள் ஒன்றாகப் பெற்றவர்—யாவற்றையும் தம்முன்னே காணும் ஞான திருஷ்டியைப் பெற்றவர்—திரிநேத்திரம் பெற்றவர்—வச்சிர ஆயுதம்—அழியாத அஃகாணி—அக்காணி பெற்றவர்—மாயை நீக்கிப் பிரமத்தைக் கண்டவர். விரிப்பிற் பெருகும். இதுதான் முதற்படி—அமலமுதற்படி. மலபரிபாகம் பெற்ற படி. வீடு பேற்றிற்கு வாசற்படி. இஃதன்றி வேறு வாயில் இல்லை. இது சத்தியம், சத்தியம். முக்காலும் கார்த்தாக்கி மொழியப்படும் சத்தியம்.

இதுவே வேத உண்மை—சைவ உண்மை. இப்பெற்றி வாய்ந்த மெய்யடியார் ஆற்றல் நம்மவரால் அளவிடற்கரியது. பிரமமாதற்குரியார் இவரே. இவர் பின் நிழற்சாயை காட்டிப்பாமரரோடு பாமரராய் உலகினர் ஐயுறுதவாறு—தமது ஒழுக்கங்களின் உண்மைகளைப் பிறர் அறியாதவாறு உலகத்தவர்போல் வாழ்ந்து பற்றற்றவராய் படியேற்றம் பெறமுயன்று கொண்டிருப்பர். முன்னிலைகள் வியப்படையுமாறு நேரும் அருட்புதுமைகளாலும்முத்திநிலையாலுமே இவரைத் தத்துவப் பெரியார் என்று உலகு கண்டிடும் என்க. மெய்யடியார் இலக்கணம் தற்காலத்தவர்க்கு முற்றுக மறை பொருளாயிற்று. இதனால் வேடதாரிகளும், வித்துவான்களும், உபாசனையாளர் சிலருமே மெய்யடியார் எனப் போற்றப்படுகின்றனர். இவர் சகவாசமே—இவரைப் போற்றுவதே "அடியார் நடுவுள் இரு" த்தலுமாம் எனத் துணியப்படுவதாயிற்று. செடிசேருடலத்தோடு "அடியார் நடுவுள் இரு" க்க முடியாது என்பதைத் தற்காலத்தவர் அறிவது எப்படி? செடிசேருடலுடையார் அடியவராகார் என்பதனை அறிவது எப்படி? "அடியார் பொன்னம்பலத்தாடல் கண்டாரே" (திருமந்திரம்) என்பதன் உண்மையை அறிவது எப்படி? தற்காலத்தில் உண்மை முத்திநிலை—சிவன்முத்தர் இலக்கணம் என்பன மறைபொருளாய்விட்டது வியப்பாகுமா? செத்துப்போன பின்பு முத்தியடைவது நிச்சயம் எனவும் இதுதான் வேதாகம புராண இதிகாசங்கள் கூறும் முத்தி எனவும் ஓலமிட்டு அமைவாரும் பலர். உண்மையைக் காணுமாறு ஆசைப்பட்டு—ஒருவாறு முயன்றும் அதனைக் காணமுடியாது அவச்சலனமடைந்து மாண்டுபோன புத்தன் கண்டுபிடித்த போலிச் சிவகாருண்ணியமே வித்துவப் பெரியார்க்கு—தற்காலத்தவர்க்கு—சீர்திருத்தக்காரருக்கு உயரிய சித்தாந்தமாயிற்று. தற்காலத்தவர் பலர் புத்தனை வாயாரப் போற்றிப் புகழ்ந்து சமயகுரவர் முதலிய சிவகாருண்ணிய மூர்த்திகளை இஃதடம்போல இகழ்ந்துணிந்து கொண்டமையும் வியப்பாகுமா? என்னே அறியாமையின் மகத்துவம்! சிவகாருண்ணியம் இன்னது என்பது மேல் ஓர் அத்தியாயமாக விரித்துக் கூறப்படும்.

மேலே கூறியவாற்றான் உடம்பு அமலமடைதலால் அடையப்படும் உண்மை

முத்தியே வேதாகம சம்மதம் என்பது பின்வரும் பிரமாணங்களாலும் நன்கு புலப்படும்.

சூத சங்கிதை

முத்தி நிலை யுரைத்த வத்தியாயம்.

இலகுராம்மொளிப்பிழம்போடிரண்டறக்
[கலக்கு முத்தித்
திலகமாமிதனைச்சாயுச்சியமெனச் சொலும்
[வேதாந்தம்
பலவுரைத்திடுவதென்னிப்பண்பார்முத்
[திக்குமேலோர்
வலனுறமுத்தியில்லைமாதவமனந்தக்
[கோடி (30).

[தம் ஒளிப் பிழம்பு — "உற்றவாக்கையின் உறுபொருள்" ஆகிய சிவமெனும் செம்பொருள். நலம் சத்துக் கெட்டுப் பிணவியலடையுமாயின் தம் ஒளிப் பிழம்பைக் கண்டு கலத்தல் அசம்பாவிதம் என்பது இதனால் நன்கு புலப்படும்.

"நீதியார்தமதுமெய்க்குணிரம்பொளிப்
[பிழம்பேயான
சோதிருபத்தைக்காண்பர்............"

என வேறிடத்தும் கூறப்பட்டமை காண்க.]

விரியுடனூழ்துய்த்தாகாமியமுறுதொழிற்
[றெவர்க்கும்
திரிசியமாம்பவஞ்சக்தேய்ந்துசொப்பனம்
[போற்றோன்ற
உரியவெம்பால்விழித்தோனொருவனே
[சிவன் முத்தன்
துரியமேல்விளங்குசம்மைத்தோய்ந்தவ
வனென்றோர்தி 32.

சமாதிவிதியுரைத்த வத்தியாயம்.

நீடுமாணந்தருபநிருமலவொளியிலொன்றாக்
கூடுமாறொருவாவெண்ணக்கோடலுஞ்
[சமாதியின்னும்
பாடுகொளோம்பூதத்திருகுபவண்டமுற்றும்
ஆடுகொள்விவேகமென்னுமடுநிகைத்தழ
[லைக்கொண்டு (6)

[விவேகம் என்னும் அடு நிகைத்தழல்— இலட்சியமாகிய ஞானக்கினி.]

பூதமாத்திரமேயென்னும்புத்திசெய்துறத்
[தகித்துத்
தோதகமின்றிமீட்டுத்தனுபூதக்கடய்மை
ஆதரவொடுசேத்தாதியாமெனத்தகித்துப்
[பின்னர்த்
திகிச்சத்தாதியாமசெதிபூதருக்குமத்தை.
(7).

மாயமாத்திரசொருபமென்றுமாண்புறத்
[தகித்துப்
பாயவம்மாயைதன்னைப்பாங்கருட்சார்
[பினின்று
தேய்தரத் தகித்தானந்தச் சேயோளிப்
[பிழம்பின்மூழ்கு
நேயமார்துணிவுமஃதாமெனநிசழ்த்திடு
[வரின்னும் (8).

முண்டகோபநிடத தாற்பரிய முரைத்த வத்தியாயம்.

அரணிமதித்தழல்காணல்போற்பலமெய்த
[யாகாசத்தின்மேவப்
பரசிவனைத்தியானமதிப்பாற்கண்டுசக்கை
[யெலாம்பாறநீக்கி
மருவுவர்முத்தியையுயர்ந்தோர்சோதிமய
[கோசத்தின்மன்னுஞ்சோதி
சொருபபரசிவனையவரல்லாதுமற்றெவர்
[தோன்றக் காண்பர் (11).

நீதியார்தமதுமெய்க்குணிரம்பொளிப்
[பிழம்பேயான
சோதிருபத்தைக்காண்பர்சொற்றிடுமந்த
[வான்மா
ஓதியதசேந்தியங்களுற்றசாத்திரங்கள்
[கன்மம்
ஆதிகளாலுகாளும்யாவர்க்குக்கிடைப்
பானல்லன் (18).

ஞானவாசிட்டம்.

சிகித்துவசன் கதை.

ஊற்றமுறுபாவனையின்பரிசயத்தான்மூடர்
[களுமொன்றையொன்றன்
மாற்றிவிடமமுதாக்கிடமுதத்தைநஞ்சாகநி
[மருவாநிற்பர்
ஏற்றமுறுஞ்சத்தியபாவனையாலேவித்தே
[கந்தேகமான
தோற்றிய வித்தேகமீண்டசத்திய பாவனை
[யால் விண் சொருபமாய்ப்போம் (59).

[விண் சொருபம்—சிதாகாசவடிவம். "மெய் விண்ணுற வார்க்கில்லை விதி" (வாக்குண்டாம்) என ஔவையார் அருளியதும் அறிக. உடம்பு அமலமடைந்து சூக்குமமாய் ஞான வெளியாய்—சத்தி வடிவமாய் மறைதலே முத்தி நிலை என்பதும் இதனால் நன்கு புலப்படும். தேகம் சின்மயமாதலே முத்தி நிலை யென வேதாந்த ஞானமணியும் கூறிற்று. இது பற்றியே "ஒக்கிடுகாகம் உடல் இக்கே வீழ்ந்தால் ஒடுங்கினதில்லையென்றுணர்வாய்" எனவும், "அருள்வடிவமுதமூறிட வருந்தி அஃதும் (உடலும்) இச் சிவனும் கரைந்தே, அருள் வடிவதுவும் சிவாங்கிசனும் மாயமர்ந்து நின்றிடும்நின்றபடியே" எனவும், "மேவு இவ் உடல் இங்குத் தானே, மேலொரு சிவத்தின் வடிவதாம் அருளாய் வெளியதாய் உலகு கண்டிடவே" எனவும், "தெருள் வடிவான சத்தியாய் முன்போல் திகழும் என்று அசி உரைத்திடுமே" எனவும் வேத சாரமாக அம்பிகை அருளால்எழுந்தசுத்த சாதகமும் கூறியது என அறிக. "எழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்கப் பொழிகின்ற இவ் உடல் போம் அப்பரத்தே" (விசுவக்கிராசம் செ. 1.) என்னும் திருமூலர் திருவாக்கும் இப் பொருட்டே என்பது சொல்லாமலே அமையும். உடம்பு மாற்றமடைய உணர்ச்சியும் மாற்றமடைதல் கண்கூடு. அசுத்தம் அகல அஞ்ஞானம் அகலும்—மயக்கம்—மாயை அகலும். உடம்பு அமலம் அடைய அடைய உணர்ச்சியும் அமலமடையும் — உயிரும் அமலமடையும்—பாசம் நீங்கும்—உடம்பு பிணி மூப்புக்களால் பழுதடையுங் கால் உணர்ச்சி பழுதடைதலும்—வேறுபடுதலும் கண் கூடு. ஆகவே, உடம்பு சத்துக்கெட்டுப்பிணமானால்—பிணி, மூப்புக்களால் பழுதடைந்து பிணமானால்—சுத்த அணுக்கள் கெட்டுச்செத்துப்போனால் உணர்ச்சி—சேதனம் பின்னமடைந்ததேயன்றி—அறிவு அழிந்ததேயன்றி, உயிர் அத்தகைய பிறிதோர் சம்பந்தத்தை (உடலை) நாடுவதேயன்றி, அவ்வுணர்ச்சி—உயிர் பூரணப்பட்டது—அமலமடைந்தது—முத்தியடைந்தமை அசம்பாவிதம் என்பது சொல்லாமலே அமையுமன்றோ! ஆகவே, உயிர் சிவமாகும்போது—சிவாங்கமாகும்போது அதனோடு சம்பந்தமான உடல் என்ன நிலைமையை அடைய வேண்டும்? அஃதும் அமலமடைந்து சூக்குமமாய்ச் சத்தியாய் அதனோடு சம்பந்தமுடையதாய்த் திகழும் என்பதும் சொல்லாமலே அமையுமன்றோ! இதனால் உடம்போடு அடைதலே — நலம் அமலமடைந்து மறைதலே உண்மைச் சைவ முத்தியாதல் வெள்ளிடை மலைபோல விளங்கி நிற்றல் கண்டு கொள்க.]

(தொடரும்)

"வித்தக" மதிப்புரை

கந்தபுராண உரையாசிரியரும்,
"சொற்பொருள் விளக்கம்"
என்னும் தமிழ் அகராதியை இயற்றி
வெளிப்படுத்தியவரும்,
பல நூல் ஆக்கியோரும்,
வாக்கிய பஞ்சாங்க கணிதரும்,
பிராமண குலோத்தமரும் ஆகிய,
யாழ்ப்பாணம் பருத்தித்துறை
ப்ரம்மஸ்ரீ
ச. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

பணித்த திருமுகம்

"வித்தகம்" என்னும் பெயர் பூண்டு புதுவையில் இருந்து வெளிவரும் வார வெளியீடாகிய பத்திரிகையைப் பெற்று வாசித்து மகிழ்ந்தேம். வேதாகம சமரசத்தை உள்ளடக்கிய மதமே உண்மைச் சைவமதமாகும். இக்காலத்தில் சைவ சமயிகளுள்ளே பலர் சைவ சமயத்தின் கோட்பாடுகளைப் பல திறப்பட வெளியிட்டு வருகிறார்கள். சமய உணர்ச்சி நிரம்பப் பெறாதவர்கள் சிலர் அந்த வெளியீடுகளை வாசிக்கும்பொழுது பலவகையான ஐயங்களையும் விபரீத விளக்கங்களையும் உடையவர்களாகின்றார்கள். குறித்த பத்திரிகையின் ஆசிரியராகிய தென்கோவை ஸ்ரீமாந். ச. கந்தையபிள்ளை யவர்கள் வேதாந்த சித்தாந்த நூல்கள் பலவற்றையும் நன்கு ஆராய்ந்து அவற்றுள் மறைபொருள்களாயுள்ள உண்மைகளை இப்பத்திரிகை வாயிலாகப்போதித்து வருகின்றார்கள். ஆதலால் சைவ சமயிகள் எல்லோரும் இப்பத்திரிகையை ஆதரித்து இத்தகைய சிவ தொண்டை ஊக்கப்படுத்துதல் சிறந்த புண்ணியமாகும்.

யாழ்ப்பாணம்
பருத்தித்துறை
(30—1—34)
ச. சுப்பிரமணிய
சாஸ்திரிகள்.

குறிப்பு:—வாய்மையான வேத ஆகம சமரசமே உண்மைச் சைவம் எனவும், நாத அந்தமாகிய வேத அந்த இயல்பையும் சித்தின் அந்தம் என்னும் சித்தாந்த இயல்பையும் உணர்த்தும் அருமறை நூல்களை ஆராய்ந்து எழுதப் படுவேது எமது "வித்தகம்" எனவும் உண்மையை உரைத்து இத்தகைய எமது பத்திரிகையைச் சைவ சமயிகள் யாவரும் ஆதரிக்க வேண்டும் என தங்கள் அபிப்பிராயத்தை மனமுவந்து அளித்த இப்பெரியாருக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற்பாலதேயாம்.

[ப—ர்.]

புத்தக மதிப்புரை

தோத்திர மஞ்சரி

இது தேவாரம் திருவாசகம் முதலிய தத்துவப் பெரியார் திரு மறைகளிலும் மற்றைய வித்துவப் பெரியார் பாடல்களிலும் உள்ள செய்யுட்கள் பலவற்றைத் தொகுக்கப்பெற்ற ஒரு நூலாகும். தொகுத்தோர் "எமது வித்தக" ஆசிரியரின் வித்தியா குரவருள்ளே தலை நின்றவரும் புலவர் திலகருமாகிய யாழ்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமாந் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் துவிதீய புத்திரரும் தமிழ்ப் பண்டிதருமாகிய திருவாளர் முத்துக்குமாரசாமிப்பிள்ளை பீ. ஏ. அவர்கள் ஆவர். இந்நூல் பாடசாலை மாணவர்க்கும் பிறர்க்கும் பயன்படக் கூடியது. சுன்னாகம் "திருமகள்" அச்சியந்திரசாலையில் அழகுற அச்சிட்டு வெளியிடப் பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் ஷை பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறுக.

புலோலிப்

பசுபதீச்சுரரந்தாதி

இஃது யாழ்ப்பாணத்துப் புலோலியம் பதியிற் கோயில் கொண்டருளிய பசுபதீச்சுரர்மீது தோத்திரரூபமாகப் பாடப்பட்ட ஒரு நூலாகும். பாடியோர் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் தக்க பாண்டித்திய முடையவரும் சிவநேசருமாகிய பருத்தித்துறை சார்ந்த புலோலி ப்ரம்மஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் ஆவர். செய்யுட்கள் ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் கொண்டு பத்திச் சுவை ததும்பி மிளிர்கின்றன. இதன் விலை சதம் 10. ஷை நூலாசிரியர் மாணவராகிய ப்ரம்மஸ்ரீ த. காசிநாத சர்மா அவர்களிடம் பெறற்பாலது.

TO THE EDITOR

VITTAGAM

MY DEAR MASTER,

I have received your Kind letter. I shall recommend your valuable paper to every Christian. It is a journal which brings to the surface the truths of life buried in the depth of Time. In the light of your re-interpretation of the myths which the moderns have discarded as idle tales, I am able to see and enjoy and bask in the effulgence of my Lord and master Jesus of Nazarath. Every Tamil Christian must read your journal to understand Jesus in relation to his past.

May the God of Truth give you long life and sufficient strength and Courage to dive into the past and bring to light the hidden treasures of life. "Life, more life, abundant life" is the cry of Humanity.

YOUR OBEDIENT DISCIPLE.

26—1—34

S. G. ARULANANDHAM.

"வித்தகம்" பெற்ற
மதிப்புரை

ஆரிய திராவிட மகா பண்டிதரும்,
வேத சிவாகமாதி பல சாஸ்திர
விற்பன்னரும்,
சைவாபிமான சீலரும்,
சிவநேசருமாகிய
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால்
மதிப்புரை பெற்றவரும்,
"சிவபெருமானலங்காரம்"
"புலோலிப் பசுபதீசுர ரந்தாதி"
முதலிய சில பிரபந்தங்களை இயற்றிய
புலவர் திலகரும்,
யாழ்ப்பாணம் கொழும்பு திருக்கோணமலை முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களில் பிரதிட்டை சம்புரோட்சணம் மஹோற்சவம் முதலியவற்றை ஆகம நூன்முறை வழுவாது நடாத்தி
மிகப் பிரசித்தி பெற்றவரும்,
ஆதிசைவ அந்தணர் குல திலகரும்
ஆகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறை
சார்ந்த புலோலி

ப்ரம்மஸ்ரீ
ம. முத்துக்குமாரசுவாமிக்
குருக்கள் அவர்கள்
பணித்த திருமுகம்.

புதுவையிலிருந்து வெளிவரும் "வித்தகம்" என்னும் இவ்வாரப் பத்திரிகையைப் பெற்று வாசித்து மகிழ்ந்தேம். அதிலே எழுதப்பெற்ற ஒவ்வொரு விஷயமும் சிவனாரிய வேத சிவாகமங்களிலும், அச்சிவபெருமான் அருள் பெற்ற மெய்ஞ்ஞானச் செல்வர்களாகிய மகான்கள் அருளிச் செய்த தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலியவைகளிலும் உள்ள மறைபொருள்களை யாவரும் எளிதின் உணரும் வண்ணம் நன்கு விளக்கிக் காட்டுகின்றன. ஆதலால் நம் சைவாபிமானிகள் எவர்களும் இப்பத்திரிகையைப் பெற்று தாம் இனிது வாசித்து உணர்ந்தும் தம்மைச் சார்ந்தவர்கட்கும் இதன் அருமை பெருமைகளை விளக்கியும் இனிது பாராட்டி ஆதரிப்பது வேண்மையான சிவபுண்ணியமாகும்.

வாழ்த்து
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய
விருத்தம்.

இத்தகைய வித்தகமாம் பத்திரிகை இந்
[நிலத்தே இனிது வாழி
சித்தமகிழ் வுடனிதனை யாதரிப்போர் சிவ
[னருள்பெற்றினிது வாழி
வித்தகனும் புதுவை நந்தி யுயரருளால்
[விமலநெறி விளங்குசைவ
முத்திநிலை முறை விளக்கு முதன்மை
[பெறு மாசிரியர் வாழி வாழி.

யாழ்ப்பாணம்
புலோலி
30—1—34

இங்ஙனம்
ம. முத்துக்குமார
சுவாமி குருக்கள்.

குறிப்பு:— எமது பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளை நன்கு பரிசிலனை செய்து தம் அகத்து எழுந்த ஆராமையாலும் அன்பினாலும் நந்தியெம் பெருமான் அருளால் வெளிப்பட்ட இவ்வுண்மைகளைச் சகலரும் வாசித்து உணர்ந்து எமது பத்திரிகையை ஆதரிக்க வேண்டும் எனவுக்கி இவ் அரிய பெரிய மதிப்புரையையும், "வித்தகம்" நீடூழி வாழ வேண்டுமென அதனையும், வாய்மையான வேதாகம உண்மைகளையும், அவற்றை உணர்த்தும் தத்துவப் பெரியார் அருளிய மறைகளின் உண்மைகளையும் புதுவை நந்தி அருளால் அறிந்து எழுதுகின்ற எமது பத்திரிகையின் போசிரியர் வாழ வேண்டுமென அவரையும் வாழ்த்தி அரிய வாழ்த்துப் பாவையும் மனமுவந்து அளித்தமையோடு இச் சிவப்பணிக்கு பயன்பட வேண்டுமெனக் கூறிச் சந்தாப் பணத்தையும் மனமுவந்து அளித்த சற்குண உத்தமரும் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மிக்க பாண்டித்தியமுடைய மஹா வித்துவப் பெரியாருமாகிய இவ் ஆதிசைவ அந்தண குலகுருவுக்கு எமது மனமார்ந்த நமஸ்காரத்தை சமர்ப்பிப்பதேயன்றித் தமியரேம வேறு யாதுகைம்மாறும் அறியகில்லேம்.

இவ் அந்தண குலகுரு நீடு வாழும்படி எம்பெருமான் திருவடிகளைப் போற்றுகின்றேம். [ப—ர்.]

சிவபெருமானலங்காரம்

இந்நூல் கவிவாணரும் சிவநேசச் செல்வருமாகிய ஷை குருக்கள் அவர்களால் இயற்றப்பட்டது. கட்டளைக் கலித்துறைகளால் இனிதின் இயன்றுள்ளது. சிவபரம்பொருளின் மாண்பை நன்கு விளக்குகின்றது. படிப்போர் பால் பத்திமை நிகழச் செய்யும் பான்மை வாய்ந்தது. இதன் விலை சதம் 10. ஷை சர்மா அவர்களிடம் பெறற்பாலது.

பவ வருட
வாக்கிய பஞ்சாங்கம்

இது. சம்ஸ்கிருத திராவிட பண்டிதரும் சோதிட கணித சித்தாந்தியும் வித்தியா விருத்தித் தருமகர்த்தருமாகிய பருத்தித்துறை ப்ரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அனுமதப்படி அவர்கள் சகோதரர் புத்திரராகிய ப்ரம்மஸ்ரீ சே. வைத்தியநாத சாஸ்திரிகளால் கணித்து வெளியிடப்பட்டுள்ளது. வார திதி நட்சத்திர யோக கரண விபரங்களும், மகாதெசாபுத்தி கால ஹோரை பஞ்சபட்சி இயல்பு விவாகப் பொருத்தம் முதலியனவும் பவ வருட நட்சத்திர ராசிப்பலன்களும் கிரக பாத சார முதலியனவும் சுபகருமங்களுக்குரிய தினங்களும் பிற பலவும் நன்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றமையால் இப்பஞ்சாங்க நூல் யாவருக்கும் மிகப் பயன்படத்தக்கது என்பதில் ஐயமில்லை இதன் விலை அணா 4. பிரதிகள் "கலாநிதிப்பிரஸ், பருத்தித்துறை சிலோன் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறற்பாலன.

"வித்தகம்"

வருட சந்தா விவரம்.

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர் சைகோன்	ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry.
Le Gérant R. Nagarattinam.